மாகாணக் கல்வித் திணைக்களம்.வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

Past Papers Wiki

6. ஓர் அமினோ அமிலத்தின் காபொட்சில் கூட்டத்திற்கும் மற்றைய அமினோ அமிலத்தின் அமினோ கூட்டத்திற்கும் இடையே உருவாகும் பிணைப்பு

   1) மொனோ பிணைப்பு 2) டைபெத்தைட் பிணைப்பு

   3) பொலி பெத்தைட் பிணைப்பு 4) பெத்தைட்டுப் பிணைப்பு

   5) திரை பெத்தைட் பிணைப்பு

7. ஒரு வேளை உணவின் போது காபோவைதரேற்று 100g மும் புரதமும் 50g மும் கொழுப்பு 20g மும் எடுப்பாராயின் அவருக்கு கிடைக்கும் கிலோ யூல் யாது

   1) 3000 கிலோயூல் 2) 3300 கிலோயூல்

   3) 3310 கிலோயூல் 4) 3315 கிலோயூல்

   5) 3400 கிலோயூல்

8. தாவர முதல்களை மட்டும் கொண்ட விற்றமின்

   1) போலிக்கமிலம் 2) நயசின் 3) பிரிடொக்சின்

   4) தயமின் 5) ரொக்கோபெரோல்

9. ஈமோகுளோபினில் அடங்கியுள்ள பெரும் போசணை

   1) காபோவைதரேற்று 2) கொழுப்பு 3) நீர்

   4) புரதம் 5) நார்

10. எமது உணவில் நார்ப் பொருள் அடங்கியிருத்தலானது பெருங்குடலில் எவ் நோய் ஏற்படுவதைத் தவிர்க்க உதவும்

    1) நீரிழிவு 2) புற்றுநோய்

    3) இதயநோய் 4) மலச்சிக்கல்

    5) உடல்நிறை அதிகரிப்பு

11. இலிப்பிட்டுச் சமிபாட்டின் போது இலிப்பேசு சுரக்கப்படும் அதன் தொழிற்பாட்டுக்காக PH பெறுமானம் ஏறத்தாழ எவ்வளவு

    1) 5.6 2) 6.9 3) 7.8 4) 3.2 5) 2.2

12. நாகம், கல்சியம், மக்னீசியம் அகத்துறிஞ்சலை தடை செய்யும் தவிட்டரிசியிலுள்ள பதார்த்தம்

    1) அஸ்கோபிக்கமிலம் 2) பைற்றிக்கமிலம்

    3) கொழுப்பமிலம் 4) லினோலெனிக்கமிலம்

    5) தாத்தாரிக்கமிலம்

13. பின்வருவன குறைபாட்டு அறிகுறியாகும்

- ❖ நடத்தல் தாமதம்
- ❖ கால் வக்கரித்தல்
- ❖ பல் முளைத்தல் தாமதம்
- ❖ எலும்பு நலிவடைதல்

இவ் அறிகுறி காட்டும் நோய் நிலமை

1) ஸ்கேவி 2) ஒஸ்ரியோமலேசியா

3) என்புருக்கி 4) பெலகரா 5) பெரிபெரி

14. இலங்கையில் எந்த ஆண்டு வடிவமைக்கப்பட்ட போசணைத் தட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

1) 2015 2) 2016 3) 2017 4) 2018 5) 2020

15. உடலுக்கு தேவையான மொத்த சக்தியில் கொழுப்பின் மூலம் பெறத்தக்க சக்தி வீதம் எவ்வளவில் இருத்தல் நன்று

1) 45% 2) 35% 3) 25% 4) 20% 5) 10%

16. என்பு மற்றும் பற்களின் சீரான வளர்ச்சிக்கு கல்சியத்திற்கு மேலாக தேவைப்படும் கனியம்

1) நாகம், பொற்றாசியம் 2) கந்தகம், செலனியம்

3) சோடியம், குளோரைட்டு 4) பொஸ்பரஸ், மக்னிசியம்

5) அயடீன், இரும்பு

17. மிளகாயில் அடங்கியுள்ள காரம் யாது

1) பிபெரின் 2) ஜின்ஜரோல் 3 கப்செசின்

4) கரோட்டின் 5) ரெடினோல்

18. காய்கறியை நீரில் வெளிறச் செய்யும் போது நிறத்தைக் காக்க பயன்படுத்தும் பதார்த்தம்

1) நைத்திரேற்று 2) சல்பேற்று 3) அமைன்

4 சோடியம் மெற்றாபைசல்பேற்று 5) பைபீனல்

19. இலற்றிக்கமிலம் நொதித்தல் மூலம் தயாரிக்கும் உணவு

1) யோகட் 2) ஜாம் 3) பிஸ்கட் 4) மாஜரின்

5) ரின்மீன்

20. தண்ணீர் போத்தல், மென்பானப் போத்தல் தயாரிக்கும் பொலித்தீன் வகை?

1) பொலி எசுத்தர் 2) பொலிபுரோப்பலின் 3) வெள்ளீயம்

4) கடதாசி 5) பொலி எதிலின் ரெரித நேற்று

21. உணவில் அடங்கியுள்ள நோயாக்கி சில நொதியங்களை நிரோதிப்பது எதன் முதன்மையான குறிக்கோள்

1) வெப்பமேற்றல் 2) பார்ச்சல்முறை பிரயோகம்

3) கிருமியழித்தல் 4) நீரில் வெளிறச் செய்தல்

5) சமைத்தல்

PAST PAPERS WIKI

22. தேநீரின் சுவையில் செல்வாக்குச் செலுத்தும் காரணி அல்லாதது

1) பயன்படுத்தும் நீர் 2) பயன்படுத்தும் தேயிலைவகை

3) நீரின் வெப்பநிலை 4) பால்மாவகை

5) சீனியின் அளவு

23. எந்த ஆண்டு இலங்கையில் ஆடை ஏற்றுமதி ஆரம்பமாகியது

1) 1960 2) 1970 3)1980 4) 1990 5) 2020

24. *ஓர் ஊசி ஒன்றுக்கு மேற்பட்ட ஊசி

*ஒன்றுக்கு மேற்பட்ட நூல் பயன்படுத்தல் தையல்

*தனிக்கோடு போன்று காட்சியளித்தல்

இவ்வகைத் தையல்

1) மறைப்புத் தையல் 2) லொக் தையல்

3) கைத்தையல் 4) தனி நூல் சங்கிலித்தையல்

5) விஸ்பம்

25. *கனிய நார்களில் ஒன்று

*கையுறைகளாக பயன்படுகிறது

*நிலத்தில் நார்கள் படைபடையாக காணப்படும்

மேற்கூறப்பட்ட நார் எது?


1) பருத்தி 2) கண்ணாடி 3) பட்டு 4) கம்பளி

5) கன்னார்

26. துணியை எரித்தல் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது சாம்பல் திரளை போன்ற வீழ்படிவு உருவாகும் துணி யாது?

1) பருத்தி 2) அக்கிரிலிக்கு 3) டெக்குரோன்

4) கம்பளி 5) நைலோன்

27. 

மேற்கூறப்பட்ட படம் எவ் நெசவாகும்

1. சரிவுக்கோட்டு நெசவு 2) பாவுவிலா நெசவு

3) ஊடைவிலா நெசவு 4) சற்றின் 5) சாதா நெசவு

28. பாவுப் பின்னல் மூலம் பின்னப்படும் ஆடை

1) ரீசேட் 2) சேட் 3) நீச்சல் உடைகள்

4) உள்ளாடைகள் 5) கவுண்

29. யுத்த களத்தில் முன்னணியில் இருக்கும் போர் வீரர்கள் எவ்வகை நேர்த்திக்கு உட்படுத்திய ஆடைகளை அணிந்திருப்பார்

1) இரசாயனப் பொருள்களைசகிக்கும் நேர்த்தி
2) கதிர்ப்பைச் சகிக்கும் நேர்த்தி
3) குண்டு துளைக்காத நேர்த்தி
4) பற்றீரியா எதிர்ப்பு நேர்த்தி
5) தீ யெதிர்ப்பு நேர்த்தி

30. பாவாடையின் பின்பக்க இடையளவை எவ்வாறு கணித்தல்

1) இடையளவு ÷ 4 + 2 + 0.2
2) இடையளவு ÷ 4 + 1 + 0.2
3) இடையளவு ÷ 4 + 4 + 0.2
4) இடையளவு ÷ 4 + 4 + 25
5) இடையளவு ÷ 4 + 4 + 5

31. சமூக ஒழுகலாறுகளில் ஒன்று

1) உரையாடலை ஆரம்பிக்கும் ஒழுகலாறு
2) கொடுக்கல் வாங்கல் ஒழுகலாறு
3) வயது வந்தோருக்கு உரிய ஒழுகலாறு
4) வெளிப்படு தன்மை ஒழுகலாறு
5) இரகசிய ஒழுகலாறு

32. ஆம்/இல்லை என குறுகிய விடை எதிர்பார்க்கப்படும் வினா வகை எது?

1) திறந்த வகை வினாக்கள் 2) தொழில் வினாக்கள்

3) மூடிய வகை வினாக்கள் 4) மூடிய திறந்த வினாக்கள்

5) தொழில் சாரா வினாக்கள்

33. இன்பப் பொழுது போக்குச் செயற்பாட்டில் ஒன்று

1) பாசறைச் செயற்பாடுகள்
2) சமூகப் பிணைப்புச் செயற்பாடுகள்
3) சுய ஊக்கல் செயற்பாடுகள்
4) இராத்தங்கல் செயற்பாடுகள்
5) உயர் சமூக மகிழ்ச்சி

34. இலங்கையில் உள்ள தாவரவியல் பூங்காக்களின் விஸ்தீரணம்

1) 50 ஹெக்டேயர்
2) 30 ஹெக்டேயர்
3) 300 ஹெக்டேயர்
4) 100 ஹெக்டேயர்
5) 200 ஹெக்டேயர்

Past Papers Wiki

35. கூட்டமாகச் செல்லும் சுற்றுலா பற்றிய சரியான கூற்று

1) நவீன சுற்றுலாத் துறையாகும்
2) சுற்றாடலில் குறைந்த பட்சம் எதிர்மறை விளைவு
3) பிரசித்தி பெற்ற சுற்றுலா இடங்களுக்குச் செல்லுதல்
4) அழமான அனுபவங்களைப் பெறல்
5) மிகச்சிறிய குழுக்களாகச் சுற்றுலா செல்லுதல்

36. சுற்றாடல் சார்ந்த நேர்வகையான தாக்கங்களில் ஒன்று

1) தொழில் வாய்ப்புக் கிடைத்தல்
2) சூழல் மேம்படுத்தல்
3) பண்பாட்டு மரபுரிமை
4) பொருளாதாரப் பொசிவு
5) பிரதேச அபிவிருத்தி

37. நீர் நுகர்வினை பகுப்பாய்வு செய்யும் போது மொத்த நீர் நுகர்வில்

விவசாயத் தேவைகளுக்கான நீர் வீதம்

1) 70% 2) 23% 3) 7% 4) 10% 5) 80%

38. இலங்கையில் குடிநீருக்கான விவரக்கூறு எந்த ஆண்டு எந்த இலக்க தர நியமங்களில் காட்டப்பட்டுள்ளது

1) 2013ம் ஆண்டு SLS 600
2) 2013ம் ஆண்டு SLS 614
3) 2013ம் ஆண்டு SLS 680
4) 2013ம் ஆண்டு SLS 600
5) 2013ம் ஆண்டு SLS 650

39. ஒரு மின் அலகை வாற்றுமானியில் தருக

1) ஒரு கிலோ வாற்றுமானி
2) இரண்டு கிலோ வாற்றுமானி
3) மூன்று கிலோ வாற்றுமானி
4) நான்கு கிலோ வாற்றுமானி
5) ஆறு கிலோ வாற்றுமானி

40. உயிர் கம்பியின் ஊடாக வீட்டிற்குப் பாயும் மின்னானது முதலில் எதனூடாகப் பாயும்

1) சேவை உருகி
2) மிகை சுமத்துகைச் சுற்றுப்படைப்பான்
3) எச்ச ஒட்டச் சுற்றுப்படைப்பான்
4) நுண் சுற்றுப் படைப்பான்
5) தலைமை ஆளி

41. *சேதன உணவுகளுள் உட்கொள்ளல்

*மீள உருவாக்க கூடிய சக்தி வளங்களைப் பயன்படுத்தல்

*தங்களது உணவுகளை தாமே உற்பத்தி செய்து கொள்ளல்

மேற்கூறப்பட்ட விடயம்

1) பாதச்சுவடு 2) பசுமை உற்பத்தி
3) பசுமை நுகர்வோர் 4) பச்சை வீட்டு விளைவு
5) இயற்கை வளம்

42. பின்வருவனவற்றுள் உயிர் தொழிற்பாட்டு கூறுகளில் ஒன்று

1) வெப்பநிலை 2) ஒட்சியேற்றி 3) ஆதாரப்படை

4)PH பெறுமானம் 5) நீர்ச்செயற்பாடு

43. பசுமை நுகர்வின் செயற்பாடு தன்மைக்குப் பொருத்தமற்றது

1) தங்களது உணவைத் தாமே உற்பத்தி செய்தல்

2) பிரதேச உணவுகளை நுகர்தல்

3) பொலித்தீன் பயன்பாட்டை அதிகரித்தல்

4) சேதன உணவை உண்ணல்

5) தேவையானவையை மட்டும் கொள்வனவு செய்தல்

44. மண் மூடு படையாக பயன்படக்கூடியன

1) மஞ்சள், இஞ்சி 2) வல்லாரை,பொன்னாங்காணி

3) சிறுபுல்லடி,திப்பிலி 4) ஆடாதோடை,வேம்பு

5) வேம்பு, வேங்கை

45. கட்டிளமைப் பருவத்தின் வயதெல்லையை 13 – 18 என வரைவிலக்கணப்படுத்திய உளவியலாளர்

1) கெசல் 2) ஸ்ரொட் 3) ஹர்லொக் 4) ஜீன்பியாஜே

5) சிக்மன்புரொய்ட்

46. ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் புறக்காரணி யாது?

1) தோற்றம் 2) தோலின் நிறம் 3) குடும்பம் 4) விசேட திறன்கள்

5) சில நோய்கள்

47. உள அழுத்தம் கொண்ட நபர்களின் மனவெழுச்சியின் இயல்பு

1) அதிக உணர்ச்சி வசப்படல் 2) அதிகபசி 3) விறைப்பு

4) தீர்மானமெடுக்க முடியாமை 5) பெருமூச்சுவிடல்

48. இலங்கையில் தற்காலத்தில் முயற்சியாண்மை முன்னேற்றத்திற்கு மிக அவசியமாக தேவைப்படும் சூழ்நிலை

1) அமைதியான பொருளாதார அரசியல் சூழல்

2) சிறந்த பயன்தரும் கல்விமுறை

3) அரச நிறுவனங்களின் ஆதரவு

4) ஆராய்ச்சி அபிவிருத்தி வசதி

5) நிதி ஊக்குவிப்பு வசதி

49. வணிகம் ஒன்றை நடாத்திச் செல்லும் போது செயற்பட வேண்டிய புறவாரி ஒழுக்கங்களில் ஒன்று

1) உற்பத்தி செய்தல் 2) கொடுக்கல் வாங்கல்

3) தரக்கட்டுப்பாடு 4) ஊழியர் உரிமை

5) நுகர்வோர் தேவை

50. உள்ளீடுகள் வெளியீடுகளாக மாற்றப்படும் விகிதம்

1) வினைத்திறன் 2) விளைதிறன்

3) வெளியீடு 4) உள்ளீடு 5) விகிதசமன்

Past Papers Wiki

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்குமாகாணம் Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்குமாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ஆறாந் தவணைப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) 6th Term Exam. 2024

மனைப்பொருளியல் II Home Economics - II	28	T	II	மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு 10 நிமிடம்

*** வினாத்தாளை வாசித்து தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

அறிவுறுத்தல்கள்:
* முதலாம் வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்குக.

01)

i) இலங்கை கட்ட அமைப்பில் பயன்படுத்தப்படும் இரு மரபுமுறைகள் எவை?
ii) நீர் தேவைகளின் மூன்று கட்டங்களும் எவை?
iii) பல்நிரம்பாக் கொழுப்பமிலம் என்பதை அறிமுகம் செய்க?
iv) அதி உக்கிர குறையூட்டத்தின் இரண்டு நிலைகளும் எவை?
v) மனிதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற செயற்கைநார்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
vi) முற்பரிகரிப்பு என்றால் என்ன?
vii) சுற்றுப்பயணத்தின் பிரதான பேதங்கள் (Streams) எவை?
viii) இயற்கை வளங்களின் மீள உருவாகத்தக்க வளங்களின் இயல்புகள் எவை?
ix) தனிநபர் ஆளிடைத்தொடர்பை கட்டியெழுப்ப இன்றியமையாத விடயங்கள் எவை?
x) "கோட்டின் ஒல்பொட்" கூறிய "ஆளுமை" வரைவிலக்கணம் யாது?

(10x2=20 புள்ளிகள்)

02)

i) சமூக வாழ்க்கைக் சூழல் என்பதை வரையறுக்க? *(03 புள்ளிகள்)*
ii) நவீனத்துவகால கட்டடவடிவமைப்பு இயல்புகளை விபரிக்க? *(03 புள்ளிகள்)*
iii) உட்புறவெளி நிர்மாணிப்பின் பிறதுணைச்சாதனங்கள் மூன்றைக்குறிப்பிட்டு அதில் இரண்டினை வீட்டில் பயன்படுத்தும் முறையினை விபரிக்க? *(05 புள்ளிகள்)*
iv) மின்சக்தி பரவலாக பரவலாக பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஐந்து தருக. *(05 புள்ளிகள்)*

03)

i) அவித்த உருளைக்கிழங்கில் மாப்பொருள் உண்டு என்பதை எவ்வாறு பரிசோதனை செய்வீர்? *(03 புள்ளிகள்)*
ii) ஒமேகா - 03 கொழுப்பமிலம் அடங்கிய சிறிய மீன்கள் உட்கொள்வதால் தடுக்கப்படும் நோய்கள் எவை? *(04 புள்ளிகள்)*
iii) கொழுத்த உடல்நிலை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? *(04 புள்ளிகள்)*
iv) உயர்குருதிமுக்க நோயாளிக்கு ஒரு நாளைக்கான உணவுப்பட்டியலை திட்டமிடுக? *(05 புள்ளிகள்)*

 முழுப்பதிப்புரிமையுடையது/All Rights Reserved

04)

i) a) உணவில் அடங்கியுள்ள நீரின் இரண்டு வடிவங்களும் எவை? (02 புள்ளிகள்)

b) உணவில் அடங்கியுள்ள ஈரலிப்பின் அளவை எவ்வாறு கணிப்பிடுவீர்? (01 புள்ளிகள்)

ii) உணவு பாண்டலடையும் செயன்முறையை துரிதப்படுத்தம் காரணிகள் எவை? (03 புள்ளிகள்)

iii) உணவை கிருமியழிக்கும் முறைகளையும், கிருமியழிப்பு செய்வதன் முக்கியத்துவத்தையும் விபரிக்க? (05 புள்ளிகள்)

iv) உணவு பொதியிடுபொருளாக பொலித்தீன் பயன்பாட்டை விபரிக்க? (05 புள்ளிகள்)

05)

i) ஆடை உற்பத்தி தொழிற்சாலையில் ஆடை தைக்கும் முறைகளைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

ii) வணிகத்தையல் முறைகளை ஆறு வகையாக வகுத்துக்காட்டுக. (03 புள்ளிகள்)

iii) சற்றின் / சற்றீன் நெசவுக் கோலத்தை விபரிக்க? (04 புள்ளிகள்)

iv) குறும்பாவாடை தைக்கும் ஒழுங்குமுறையைத் தருக? (06 புள்ளிகள்)

06)

i) நிலைபேறான வளநுகர்வில் கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் எவை? (03 புள்ளிகள்)

ii) உணவுப்பயிர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தரையலங்கரிப்பின் அனுகூலங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

iii) ஓய்வு நேரத்தை வினைத்திறனாக் கழிப்பதற்காக கவனம் செலுத்த வேண்டிய காரணிகளை பட்டியல்படுத்துக? (05 புள்ளிகள்)

iv) சுற்றுலாப்பயணிகளுக்காக தொழிற்படும் துணைச்சேவைகள் பற்றி கலந்துரையாடுக? (05 புள்ளிகள்)

07)

i) கட்டிளம் பருவ மனவெழுச்சி விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரசவத்துக்கு முந்திய பருவகால காரணிகள் எவை? (03 புள்ளிகள்)

ii) கட்டிளம் பிள்ளை வெளிக்காட்டும் அறிதலாட்சி இயல்புகள் எவை? (03 புள்ளிகள்)

iii) கட்டிளம் பருவத்தினர் எதிர்நோக்கும் கல்விசார் பிரச்சனைகள் எவை? (05 புள்ளிகள்)

iv) கட்டிளம் பருவத்தினரின் ஆளுமை விருத்திக்குச் சமூக அமைப்பின் பங்களிப்புப் பற்றி ஆராய்க? (05 புள்ளிகள்)

08) பின்வரும் தலைப்புக்களில் **(நான்கைப்)** பற்றிக் குறிப்பு எழுதுக.

i) சூழல்சார் வடிவமைப்பில் பயன்பாட்டுக்காரணியான "அமைப்புக் அமைவும்" பயன்படும் தன்மை.

ii) நபரின் உணவு வேளையில் பாலும் பாலுற்பத்தி பொருட்களை சேர்ப்பதன் முக்கியத்துவம்.

iii) துணி மேற்பரப்பில் அலங்காரஉருக்கள் இடுவதன் முக்கியத்துவம்.

iv) சுற்றுலாத்துறையின் சமகாலப்போக்கு.

v) கட்டிளம் பருவத்தினரின் ஆளுமை விருத்திக்கு பாடசாலையின் பங்களிப்பு.

(04 × 04 = 16 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library